குறு மைய அளவிலான விளையாட்டு போட்டி

தும்மனட்டி அரசு பள்ளி மாணவிகள் அசத்தல்

ஊட்டி, நவ. 9: வளைப்பந்து, கோ-கோ மற்றும் டேபிள் டென்னீஸ் போட்டிகளில் தும்மனட்டி அரசு பள்ளி மாணவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர்.

ஊட்டியில் உள்ள பெத்லேகேம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் குறுமைய அளவிலான வளைப்பந்து போட்டி நடந்தது. 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்ட மாணவிகள் பிரிவில் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் மாணவிகள் வெற்றி பெற்று மாவட்ட அளவிலான போட்டிக்கு தும்மனட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகள் தகுதி பெற்றனர்.

17 வயதிற்குட்பட்ட கோ-கோ போட்டியில் முதலிடம் பிடித்தனர். 19 வயதிற்குட்பட்ட டேபிள் டென்னீஸ் போட்டியிலும் வெற்றி பெற்று முதலிடம் பிடித்தனர்.

வளைப்பந்து போட்டியில் கடந்த 2006ம் ஆண்டு முதல் இதவரை மாவட்ட அளவிலான போட்டிகள் மற்றும் மாநில அளவிலான போட்டிகளில் தும்மனட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகள் முதலிடம் பிடித்து வருகின்றனர். இவர்களுக்கு பாராட்டு விழா பள்ளி வளாகத்தில் நடந்தது.

விழாவில், உடற்பயிற்சி ஆசிரியை ஜாஸ்மின் ஷீபாராணி, ராகேஷ் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும், விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் கணேசன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மாதன் ஆகியோர் கலந்துக் கொண்டு மாணவர்களுக்கு பாராட்டுக்களை தெரவித்தனர். இதில் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் கலந்துக் கொண்டனர்.

ஓவேலி அரசு பள்ளியில்

மாணவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு முகாம்

▶ ஓவேலி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த சட்ட விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்ட மாணவர்கள். அடுத்த படம்: கூடலூர் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி பிரகாசம் பேசினார்.

உரிமையியல் நீதிமன்ற நீதிபதி பங்கேற்பு

கூடலூர், நவ. 9: கூடலூரை ஓவேலி அரசு மேல்நிலைப் பள்ளியில் உரிமையியல் நீதிமன்ற நீதிபதி பிரகாசம் தலைமையில் மாணவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

ஓவேலி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான நாட்டு நலப் பணி திட்ட சிறப்பு முகாம் திட்ட அலுவலர் ஸ்டீபன் தலைமையில், 30 மாணவர்கள் கொண்ட குழுவுடன் கடந்த ஏழு நாட்களாக பல்வேறு பகுதிகளில் தூய்மை மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

முகாமின் நிறைவு விழா, மற்றும் சட்ட விழிப்புணர்வு முகாம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது .பள்ளி தலைமை ஆசிரியர் எலியாஸ் தலைமை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி பிரகாசம் பேசியதாவது: போக்சோ சட்டம் மிகவும் கடுமையான சட்டம். 18 வயதிற்கு கீழ் உள்ள பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அனைத்து வகையான குற்றங்களிலும் ஈடுபடுபவருக்கு நிபந்தனையற்ற கடுமையான தண்டனை வழங்கப்படும்.

குழந்தை திருமணங்களை அறவே தடுக்கப்பட வேண்டும். போதை பொருட்களை பயன்படுத்துவோர் மற்றும் அவர்களுக்குதுணையாகஇருப்பவர்களையும் கடுமையான சட்ட விதிமுறைகள் பின்பற்றி தண்டிக்க வழி வகைகள் உள்ளது. எனவே மாணவர்களும் பெற்றோர்களும் ஒன்றிணைந்து போதைப் பொருட்கள் பயன்பாட்டினை முற்றிலுமாக தடுத்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூடலூர் வக்கீல் சங்க தலைவர் ஜைனுல் பாபு கூறுகையில், 'பொது மக்கள் இலவச சட்ட உதவி மையத்தை அணுகி அவர்களுக்கு தேவையான அனைத்து வகையான இலவச சட்ட உதவிகளையும் சான்றிதழ்களையும் பெறுவதற்கு தேவையான உதவிகளை செய்ய தயாராக உள்ளோம்' என்றார்.

கூடலூர் நகைச்சுவையாளர் மன்றத்தின் செயலாளர் அருண்குமார் பேசும்போது, 'எதிர்வரும் காலங்களில் அனைத்து பள்ளிகளிலும் நகைச்சுவை மன்றங்கள் துவக்கப்பட்டு மாணவர்களுக்கு பல்வேறு வகையான திறன்களை வளர்ப்பதற்கான பயிற்சி வழங்கப்படும். வறுமையால் உயர் கல்வி தொடர முடியாத மாணவ -மாணவிகளுக்கு அனைத்து வகையான கல்வி கட்டணங்களும் செலுத்தி படிக்க வைக்க உறுதி ஏற்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் நியூஹோப் இன்ஸ்பெக்டர் கணேசன், ஓவேலி பேரூராட்சி மன்றத்தலைவர் சித்ராதேவி, துணை தலைவர் சகாதேவன், ஓவேலி பேரூர் செயலாளர் செல்வரத்தினம், பள்ளி மேலாண்மை குழு பொறுப்பாளர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக ஆசிரியர் கவிதா அனைவரையும் வரவேற்றார். ஆசிரியர் மீரா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஆசிரியர் நாகராஜ் நன்றி தெரிவித்தார்.

தனியார் தோட்டங்களில் பணி ஓய்வு பெற்றவர்களுக்கும் வீடு கட்டித்தரப்படும்

▶ கோத்தகிரியில் ஆ.ராசா எம்பி பேசினார்.

கோத்தகிரியில் ஆ.ராசா எம்பி பேச்சு

கோத்தகிரி, நவ.9: தனியார் தேயிலைத்தோட்டத்தில் வேலை செய்து ஓய்வு பெற்றவர்களுக்கு வீடு கட்டத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று கோத்தகிரியில் ஆ.ராசா எம்பி பேசினார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அடுத்த கட்டபெட்டு பகுதிக்கு திமுக துணைப்பொதுச்செயலாளரும், நீலகிரி எம்பியுமான ஆ.ராசா நேற்று வந்தார். அவருக்கு கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன் தலைமையில் பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது ஆ.ராசா பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரும் வகையில் தொழிற்பூங்கா அமைக்க அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் மட்டுமின்றி, தனியார் தேயிலை தோட்டங்களில் பணி செய்து ஓய்வு பெற்ற தோட்ட தொழிலாளர்களுக்கும் வீடு கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட செயலாளர் முபாரக், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் பொன்தோஷ், கோத்தகிரி ஊராட்சி மன்ற தலைவர் ராம்குமார், அவைத்தலைவர் போஜன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எம்.ராஜூ, முஸ்தபா, மாவட்ட துணைச்செயலாளர் ரவிக்குமார், குன்னூர் நகர் மன்ற துணைத்தலைவர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர் வீரபத்திரன், பேரூராட்சி தலைவர் ஜெயக்குமாரி, துணைத்தலைவர் உமாநாத், பேரூர் திமுக செயலாளர் காளிதாஸ், தேனாடு ஊராட்சி மன்ற தலைவர் ஆல்வின் உட்பட இளைஞரணி, மாணவர் அணி, மகளிரணி மற்றும் திமுகவினர் பங்கேற்றனர்.

கோயில் தேர்த்திருவிழா கொடியேற்றம்

▶ பாலக்காடு கல்பாத்தி நிளா நதிகரையோரம் உள்ள விசாலாட்சி விஸ்வநாதர் கோயில் தேர்த்திருவிழா கொடியேற்றம் பக்தர்கள் மத்தியில் மேல்சாந்தி துவஜ ரோகரண பூஜைகளுடன் கொடியேற்றி வைத்தார். பக்தர்கள் கரகோஷங்கள் எழுப்ப கொடியேற்றம் நேற்று நடைபெற்றது.

பந்தலூரில்

குடிநீர் தொட்டி அருகே தேங்கிய கழிவு நீரால் சுகாதார சீர்கேடு

பந்தலூர், நவ.9 : பந்தலூர் பஜார் குடிநீர் தொட்டி அருகே கழிவுநீர் தேங்கி நிற்பதால் சுகாதாரம் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது.

பந்தலூர் பஜார் நெல்லியாளம் நகராட்சி வணிகவளாகம் அருகே வாட்டர் ஏடிஎம் அமைக்கப்பட்டு தற்போது செயல்படாமல் பழுதாகி பயனற்று உள்ளது. கலெக்டரின் உத்தரவின் பேரில் பயனற்று இருக்கும் வாட்டர் எடிஎம் இயந்திரத்தை பழுது பார்த்து மீண்டும் செயல்படுத்த நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த வாட்டர் ஏடிஎம் அருகே நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டு அதன்மூலம் வாட்டர் ஏடிஎம் க்கு குடிநீர் வருகின்றது.

▶ பந்தலூர் பஜார் நெல்லியாளம் நகராட்சி வணிக வளாகம் அருகே வாட்டர் ஏடிஎம் மற்றும் நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள இடத்தில் கழிவுநீர் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

வாட்டர் ஏடிஎம் மற்றும் நீர்தேக்க தொட்டி அமைந்துள்ள பகுதியில் வணிகவளாகத்தில் கடை வைத்து வியாரம் செய்து வரும் சிலர் கழிவுநீர்களை கொட்டுவதால் கொசு உற்பத்தியாகி சுகாதரம் பாதிக்கப்பட்டு சாக்கடையாக காட்சி தருகிறது. இதனால் பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே நெல்லியாளம் நகராட்சி நிர்வாகம் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

கோத்தகிரியில் விளைச்சல் அதிகரிப்பு

கேரட் கொள்முதல் விலை பாதியாக குறைந்தது

▶ கோத்தகிரியில் கேரட் விளைச்சல் அமோகமாக உள்ளது. அடுத்தபடம்: அறுவடை செய்த கேரட்டை எந்திரம் மூலம் தொழிலாளர்கள் சுத்தம் செய்தனர்.

விவசாயிகள் கவலை

கோத்தகிரி, நவ.9: கோத்தகிரியில் கேரட் விளைச்சல் அதிகரித்து உள்ளது. இதனால் கொள்முதல் விலை கடந்த மாதத்தை ஒப்பிடுகையில் பாதியாக குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதானமாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். தொழிலாளர் பற்றாக்குறை, விதை, இடுபொருட்கள் மற்றும் உரங்களின் விலை ஏற்றம், வனவிலங்குகள் தொல்லை உள்ளிட்டவற்றை எதிர்கொண்டு வங்கி கடன் பெற்று விவசாயிகள் காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர்.

கோத்தகிரி பகுதியில் கடந்த சில வாரங்களாக அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் காய்கறி பயிர்கள் செழித்து வளர்ந்து பசுமையாக காட்சி அளிக்கின்றன.

தற்போது கேரட் விளைச்சல் அதிகரித்து அறுவடைக்கு தயாராக உள்ளது, கேரட் கிலோ ஒன்று கடந்த செப்டம்பர் மாதத்தில் ரூபாய் 90 முதல் ரூபாய் 100 வரை கொள்முதல் செய்யப்பட்டது. இந்த மாதம் சராசரியாக 30 முதல் 50 ரூபாய் வரை மட்டுமே மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை அவ்வப்போது பெய்வதால் தண்ணீர் தேங்கும் தோட்டங்களில் கேரட் அழுகத் துவங்கியுள்ளது,

பருவ மழை தீவிரம் அடையும் முன் உடனுக்குடன் அறுவடை செய்து விற்க வேண்டிய சூழல் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

நீலகிரியில்

69வது கூட்டுறவு வார விழா குறித்த ஆலோசனை கூட்டம்

ஊட்டி, நவ. 9: நீலகிரி மாவட்டத்தில் 69வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை வரும் 14ம் தேதி துவங்கி 20ம் தேதி வரை கொண்டாடுதல் தொடர்பான விழா குழுக் கூட்டம் நீலகிரி மத்திய கூட்டுறவு வங்கி கூட்ட அரங்கில் நடந்தது. மண்டல இணை பதிவாளர் வாஞ்சிநாதன் தலைமை வகித்தார். கூட்டத்தில் கூட்டுறவு கொடியேற்றுதல், மரக்கன்று நடுதல், ரத்த தான முகாம், கால்நடை சிகிச்சை முகாம், உறுப்பினர் கல்வித் திட்டம், இளைஞர்கள் ஈர்ப்பு முகாம், கூட்டுறவு தயாரிப்புகள் விற்பனை மேளா, பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பேச்சு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. வனத்துறை அமைச்சர் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மாவட்ட கலெக்டர் தலைமையில் மாவட்ட அளவிலான விழாவை சிறப்பாக நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டுறவு வார விழாவை முன்னிட்டு வரும் 11ம் தேதி கூட்டுறவு சங்க பணியாளர்களுக்கான விளையாட்டு போட்டிகள் ஊட்டி அண்ணா கலையரங்கில் நடத்தப்பட உள்ளது.

இதில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை கூட்டுறவு சங்க பணியாளர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டு கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் சரக துணை பதிவாளர் மது, நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் முத்து சிதம்பரம், ஆவின் பொது மேலாளர் வெங்கடாசலம் மற்றும் கூட்டுறவுத்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குருவாயூர் கிருஷ்ணர் கோயிலில்

ஏகாதசியையொட்டி விளக்கு பூஜை

யானைகள் அலங்கார அணிவகுப்புடன் உற்சவர் ஊர்வலம்

▶ குருவாயூர் கிருஷ்ணர் கோயிலில் ஏகாதசி விழாவை முன்னிட்டு வியாபாரிகள் சங்கத்தின் விளக்குப்பூஜை நடைபெற்றது. விழாவில் மூன்று யானைகள் அலங்கார அணிவகுப்புடன் உற்சவர் யானை மீது ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

பாலக்காடு, நவ.9: கேரளாவில் பிரபலமான குருவாயூர் ஏகாதசி விழா டிச. 3 ம்தேதி நடக்கிறது. இவ்விழாவையொட்டி கோயிலில் ஒவ்வொரு நாளும் சிறப்பு விசேஷ பூஜைகள் நடைபெற்று வருகின்றன. நேற்று குருவாயூர் நகராட்சியில் அமைந்துள்ள வியாபாரிகள் சங்கத்தின் விளக்குப் பூஜை நடந்தது.

விளக்குப்பூஜைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்களும், வியாபாரிகளும் திரளாக பங்கேற்றிருந்தனர். வியாபாரிகள் சங்க விளக்குப்பூஜையில் நேற்று காலை கோயிலின் சுற்றுப்பிரகாரத்தில் மூன்று யானைகள் அலங்கார அணிவகுப்புடன் உற்சவர் யானை மீது பஞ்சவாத்யத்துடன் ஊர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

டேன்டீ பிரச்னைக்கு நிரந்தர தீர்வு

காங்கிரஸ் கட்சி ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்

பந்தலூர், நவ.9: பந்தலூரில் காங்கிரஸ் கட்சி சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைப்பெற்றது. அரசு தேயிலைத் தோட்டம் டேன்டீ தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு அரசு நிரந்தர தீர்வுகாணும் வகையில் நெல்லியாளம் நகர காங்கிரஸ் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

▶ பந்தலூரில் காங்கிரஸ் கட்சி சார்பில் டேன்டீ பிரச்னைகள் குறித்து நிர்வாகிகள் ஆலோசனைகூட்டம் நடை பெற்றது.

இந்த கூட்டத்திற்கு கூடலூர் வட்டார தலைவர் ரவி தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர்கள் அஷ்ரப், கோபிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நெல்லியாளம் நகர தலைவர் ஷாஜி வரவேற்று பேசினார். சேரங்கோடு ஊராட்சி தலைவர் அவராச்சன் நிர்வாகிகள் முரளிதரன், லோகநாதன், சுப்பிரமணி, யோகநாதன், கணேஷன், செல்வகுமார், சத்தியன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

டேன்டீயில் தற்போது நிலவி வரும் பிரச்னைகள் குறித்து பேசினர். மறுவாழ்வு திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட டேன்டீ தேயிலைத் தோட்டத்தை நிர்வாகம் வனத்துறையிடம் ஒப்படைப்பதை தவிர்க்க வேண்டும், டேன்டீ தேயிலைத்தோட்ட தொழிலாளர்களை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் டேன்டீ சம்பவம் தொடர்பாக மாநில தலைவர் அழகிரி கவனத்திற்கு கொண்டு சென்று கூட்டணி கட்சி தலைவர்களின் உதவியுடன் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று டேன்டீ தேயிலைத்தோட்டத்தை மேம்படுத்துவதற்கு அழுத்தம் கொடுப்பதாக கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் ஏராளமான நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

ICICI Home Finance | கார்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ எச்சப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா

கிளை அலுவலகம்: முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601

[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம் வைக்கப்பட்ட உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் **அடையாளப்பூர்வ சுவாதீனம்** செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	M ஆனந்தன் (கடன்தாரர்) M சிவகாமி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000893786/ LHTIR00000843367/ NHTIR00000843368	கதவு எண் 5/23, SF எண் 137, பழையக்காடு முதல் தெரு, கேவிஆர் நகர் பிரதான சாலை, கருவம்பாளையம், மங்களம் சாலை தொலைவு, திருப்பூர் வட்டம் மற்றும் மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம்.	Rs. 25,19,303 /- 04th Nov, 2022	Rs. 2,592,000/- Rs. 2,59,200/-	21 நவம்பர், 2022 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	23 நவம்பர், 2022 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்சன் டைகர் இணையதளத்தில் (URL இணைப்பு- https://sarfaesi.auctiontiger.net/EPROC/) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **22 நவம்பர், 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மொத்த நிலுவைகளை மேற்கொண்டு வட்டியுடன் செலுத்த ஒரு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.

எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **22 நவம்பர், 2022 மாலை 04.00 மணி** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட காலத்தின்படி தங்கள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை எனில் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் கையொப்பமிட்ட பிரதியானது **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுண் ஹால் எதிரில், திருப்பூர்-641601** இடத்தில் **22 நவம்பர், 2022 மாலை 05.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்ப்பிக்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும். முன்வைப்புத்தொகை கேட்பு வரைவோலை (DD) ஒரு தேசியமயமாக்கப்பட்ட/ அட்டவணையிடப்பட்ட வங்கியிலிருந்து **திருப்பூரில்** மாற்றத்தக்க வகையில் "**ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்**" என்ற பெயரில் பெறப்பட வேண்டும்.

சொத்து பார்வையிடுதல், ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் குறித்த அனைத்து மேற்கொண்டு சந்தேகதீர்வுகளுக்கு, **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெடை 7021072869** இல் தொடர்பு கொள்ளவும்.

அதிகாரப்பூர்வ அதிகாரி எந்த மேற்கொண்டு காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலப்புள்ளிகளையும் நிராகரிக்க உரிமை கொண்டுள்ளார்.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, காண்க https://www.icicihfc.com/

நாள் : நவம்பர் 09, 2022
இடம் : திருப்பூர்

அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்